# வெள்ளி

★ ★ ★ ★ மே 1971

இந்திய அரசியலில்
**காமராஜர்**
தோற்றது ஏன்?

உண்மைக் கதை
**அழகி சஹாஜஸ்**

அதிக வருமானமுள்ளவர்
**எம்.ஜி.ஆரா, சிவாஜியா?**

இன்னும் பல
சுவையான செய்திகள்
**30 சதம்**




திருமதி
**ஹோட்கெனமன்**
கம்யூனிஸ்ட் அமைச்சரின்
மனைவி..........

அன்பார்ந்த
வாசகரே,

"பத்திரிகை விற்பனையாளருடன் ஒழுங்காகத் தொடர்பு கொள்ள முடியாத நிலை என்னுடையது. 'வெள்ளி'யை சந்தா முறையில் எனக்கு அனுப்பிவைத்தால் மிக உதவியாக இருக்கும்" என்று ஒரு அன்பர் கேட்டிருக்கிறார். வேறும் சிலர் சந்தா விஷயமாக விசாரித்திருக்கிறார்கள். பதிவு செய்யப்பட்ட பத்திரிகையைத் தபால் மூலம் அனுப்புவதற்கும் பத்துச்சத முத்திரை ஒட்டவேண்டுமென்று 'ஈழத்துப் பத்திரிகைகளின் வளர்ச்சியில் அக்கறையுள்ள' அரசாங்கமே சட்டம் வகுத்துள்ள காலமிது. முத்திரைச் செலவை விட, தனித்தனியே சுற்றியனுப்பும் கடதாசி, கூலி முதலிய செலவுகளும் சந்தாமுறையில் அனுப்புவதனால் ஏற்படுகிறது. இவற்றை நினைத்து 'வெள்ளி'க்கு சந்தாமுறையையே ஏற்படுத்துவதில்லையென்று முதலில் எண்ணியிருந்தேன். ஆனால் அன்பர்களின் கடிதங்கள் என் எண்ணத்தை மாற்றும்படி செய்துவிட்டன. சந்தா மூலம் வெள்ளியைப் பெற விரும்புபவர்கள் நாற்பது இதழ்களுக்கான பணத்தை அதாவது ரூபா 12/-ஐ முற்பணமாக அனுப்பிவைக்க வேண்டும். தயவுசெய்து கவனியுங்கள்: இது ஓராண்டுச் சந்தா அல்ல; நாற்பது இதழ்களுக்கான கட்டணம்! தபால் மூலம் வெள்ளியைப்பெற விரும்புகிறவர்கள், தங்கள் பெயர் முகவரிகளை தெளிவாகஎழுதி, ரூபா 12/-க்கான போஸ்ரல் / மணி ஓடர், அல்லது காசோலையுடன் "நிர்வாகி, வெள்ளி, 226, காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம்." (The Manager, Velli. 226, K. K. S. Road, Jaffna.) என்ற முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.

தி. ச. வரதராசன்,
(வரதர்)



கடந்த ஏப்ரில் 5-ம் திகதி இரவு இலங்கை முழுவதையும் பதற வைத்து விட்டார்களே சிலர்!

கெட்டித்தனமா?



தன்னுடைய வீட்டுக்கு நல்ல வழியில் உதவி செய்கிற பிள்ளையை 'கெட்டிக்காரன்' என்போம்; 'நல்லவன்' என்போம்.

வீடு சரியாயில்லை என்று நினைத்துக் கொண்டு கூரையின்மீது நெருப்பை வைக்கிற பிள்ளையை என்னென்று சொல்லுவோம்!

ஆட்சி முறையில் மாற்றம் வேண்டுமென்று விரும்பினால், அதற்கு வழியிருக்கிறதே, சட்ட ரீதியான முறையில்!

அதை விட்டு, அடித்து நொருக்கி ஆட்சியைக் கைப்பற்ற முனைந்ததைக் 'கெட்டித்தனம்' என்று சொல்லுவோம்? 'நல்ல காரியம்' என்று சொல்லுவோம்?

பிரதமர் சொல்லியிருப்பதுபோல, பரிதாபத்துக்குரிய நிலையிலிருக்கிறார்கள் பயங்கரம் விளைத்தோர். இந்த நிலையிலும், 'அவர்கள் மனம் திருப்பி விடுவார்களானால் மன்னிப்போம்' என்கிறார் பிரதமர். 'அன்னை' அவர். ஒரு அன்னையினாலேதான் இப்படிச் சொல்லமுடியும்!


ராமனுக்குச் சீதை என்ன முறை? பக். 21

அண்ணா அறிந்த பெரியார்! பக். 12

குலத் தொழில் செய்கிறார்கள். பக். 29

'கல்கண்டு' கண்டு...... பக். 31

திருமதி மோட் கெனமன்

அட்டைப்படக் கட்டுரை:

அமைச்சர்

# பீட்டர் கெனமனின் மனைவி

படிப்பு, பண்பு, தொண்டு என்ற மூன்றிலும் உயர்ந்து நிற்கும் ஈழத்து அரசியல்வாதிகளுள் முதன்மையானவர் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த பீட்டர் கெனமன்.

இலங்கையின் புகழ்பெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி ஒருவரின் மகனாகப் பிறந்து, தனது உயர்கல்வியை இங்கிலாந்தில் கற்றுக்கொண்ட பீட்டர் கெனமன், ஆரம்பத்தில் ஒரு பத்திரிகையாளராகத்தான் தனது வாழ்க்கையைத் தொடங்கினார்.

மக்களின் அன்றாடப் பிரச்சினைகளில் இவருக்குள்ள ஆர்வமும், மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்து ஒரு சிறந்த சமுதாயத்தைப் படைத்திடவேண்டும் என்ற துடிப்பும்தான் இவரை ஒரு அரசியல்வாதியாக ஆக்கின.

இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஆரம்பகால உறுப்பினர்களுள் பீட்டர் கெனமனும் ஒருவர்.

"கம்யூனிஸம் என்றால் என்ன? சோஷலிசம் என்றால் என்ன?" என்ற விஷயங்களையெல்லாம் சாதாரண மக்களும் விளங்கிக்கொள்ளும்படியாகப் பிரபலப்படுத்திய பெருமையில் பெரும் பங்கு பீட்டர் கெனமனுக்கே உரியது!

இந்த விஷயங்களில் பீட்டர் கெனமனுக்கு மிக நல்ல துணையாக விளங்கியவர் அவரது துணைவியாராகிய திருமதி மோட் கெனமன்! இவர் சென்ற மாதத்தில் காலமாகி விட்டார்!

இவரது மறைவினால் பீட்டர் கெனமனின் பலத்தில் பெரும்பகுதி குறைந்துவிட்டது என்று சொன்னால் அது மிகையாகாது.

திருமதி கெனமன் இறக்கும்போது அவரது வயது 55.

மோட் இங்கிலாந்தில் பிறந்தவர். இவரது தந்தை பெயர் ரொஜெர்ஸன்.

எப்படி கம்யூனிஸத்தின் மீது காதல் கொண்டு இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியைக் கட்டி வளர்ப்பதில் பீட்ட

"சுகுமாரன்"

கெனமன் உழைத்துவந்தாரோ அதேபோல கம்யூனிஸத்தின் மீதுள்ள அளவு கடந்த பற்று தலால் பிரித்தானிய கம்யூ னிஸ்ட் கட்சியை வளர்ப்பதில் உழைத்து வந்தவர் மோட்!


பாம் டட் என்பவர் பிரித் தானிய கம்யூனிஸ்ட் கட்சியின் முக்கியஸ்தர்களுள் தலையாய வர். துண்டுப் பிரசுரங்கள், அறிக்கைகள் வெளியிடுவதி லும், கட்டுரைகள் எழுதுவதி லும் இவர் ஒரு மன்னன்! விறு விறுப்பு, கிண்டல், கேலி, சிறந்த தர்க்கவாதம் என்பன இவரது எழுத்துக்களில் எப் போதும் காணப்படும். இவ ரது கொள்கைகளை விரும்பாத வர்களும்கூட, இவரது மொழி நடைக்காக இவரது கட்டுரை களை விரும்பிப் படிப்பதுண்டு.

மோட் இங்கிலாந்தில் இருந்தபோது இவருடன் சேர்ந்துதான் பணியாற்றி வந் தார்.

மோட் முதன் முதலில் பீட்டர் கெனமனைச் சந்திக்க நேர்ந்தது கம்யூனிஸ்ட் கட்சி அலுவல்களின்போதுதான்! 'ஷெஃப்பீல்ட்' என்ற நகரத்தில் 1951 ம் ஆண்டில் உலக சமா தானக் காங்கிரஸ் கூடியபோது தான் முதன் முதலில் இருவ ரும் சந்தித்துக் கொண்டார்கள்.

இந்தச் சந்திப்பு காதலா கப் பரிணமித்தது.

இருவரும் திருமணம் செய்துகொள்ள முடிவு செய்த னர்.



மோட் இலங்கை வரவிருக் கிறார் என்பதை அறிந்ததும், அந்நாளைய இலங்கை அரசு, இவரது வருகைக்குத் தடை விதித்திட முடிவு செய்தது.

மோட், அரசாங்கத்தின் இந்த முடிவை அறிந்ததும், அர சாங்கத்தின் கண்ணில் மண்ணைத் தூவிவிட்டு, சாதாரணமாக பிர யாணிகள் பயணம் செய்யும் கப்பலில் பயணம் செய்யாமல், சரக்குகள் ஏற்றி வந்து கொண் டிருந்த போலாந்துக் கப்ப லொன்றில் ஏறி இலங்கைக்கு வந்து சேர்ந்தார்!

இவர் இலங்கைக்கு வந்து சேர்ந்தது 1952ம் ஆண்டு தேர் தல் சமயத்தில்! பீட்டர் கென மன் அந்த நேரத்தில் தனது கட்சிக்காக மும்மரமாகப் பிரச் சாரம் செய்து கொண்டிருந் தார். எனவே, அவரால் துறை முகத்துக்குச் சென்று இவரை வரவேற்க முடியவில்லை! ஆனால்,

பீட்டர் கெனமனின் தந்தையான நீதிபதி கெனமன் துறைமுகத்தின் வாசலில் நின்று தனது மகனின் காதலியை வரவேற்று அழைத்துச் சென்ருர்.

மோட், பீட்டர் கெனமனின் மனைவியானதும், இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் வளர்ச்சிக்காக மிகுந்த உற்சாகத்துடன் உழைக்கத் தொடங்கிஞர்.

கம்யூனிஸ்ட் கட்சியின் ஆங்கில வாரப் பத்திரிகையான "ஃபோர்வார்"டின் ஆசிரியராகக் கடமையாற்றி வந்தவர் இவர்தான்! கம்யூனிஸ்ட் பெண்கள் சமாஜத்தின் உபதலைவர்களுள் ஒருவராகவும் இவர் பணி செய்து வந்தார்!

பிரிட்டனில் இருந்தபோது அறிஞர் பாம் டட்டிடம் இவர் பெற்ற பயிற்சி, 'ஃபோர்வார்ட்"பத்திரிகையின் ஆசிரியராகப் பணியாற்றத் தொடங்கியதும் இவருக்குப் பெரும் துணை செய்தது.

கம்யூனிஸ்ட் கட்சியினது அமைப்பு, நிர்வாகம், பப்ளிஸிட்டி போன்ற விஷயங்களில் மோட் இருக்கும் வரைக்கும் அவரது கைவண்ணம் தெரிந்த வண்ணமே இருந்தது. இவற்றின் பெரும் பகுதியைக் கவனித்து வந்தவர் மோட் கெனமன் தான்!

எங்காவது ஓர் இடத்தில் ஏதாவது ஒரு பிரச்சினை என்றவுடன் எப்படி பீட்டர் கெனமன் அந்த இடத்துக்கு ஓடிச் செல்லுகின்ருரோ அதே போல ஏழை மக்களுக்கு ஏதாவது பிரச்சினை என்றவுடன் அதனைத் தீர்ப்பதற்குத் துடிக்கும் குணம் மோட் கெனமனிடமும் இருந்தது!


"ஃபோர்வார்ட்" பத்திரிகையின் கடைசிப் பக்கத்தில் "சித்ரா" என்ற புனைபெயரில் ஒருவர் சில குறிப்புகளை ஒவ்வொரு வாரமும் எழுதி வருவது வழக்கம். கடைசிப் பக்கம் முழுவதுமே இவரது குறிப்புகள்தான் நிரம்பியிருக்கும். கேலி, கிண்டல். தர்க்க வாதம், அருமையான நகைச்சுவை ஆகிய எல்லாமே அந்தப் பக்கத்தில் இருக்கும். பல்வேறு வகைப்பட்ட விஷயங்களைப் பற்றியும் அந்தப் பக்கத்தில் அபிப்பிராயம் கூறப்பட்டிருக்கும். ஆங்கில மொழி வெகு அழகாகக் கையாளப்பட்டிருக்கும்.

கெனமன் தம்பதியர்தான் அந்தப் பக்கத்தை எழுதி வந்தார்கள். ஆனல் ஒரு அதிசயம். அந்தப் பக்கத்தைத் தொடர்ந்து படித்துவரும் கைதேர்ந்த ஒரு வாசகனுலுங்கூட பீட்டர் கெனமன் எழுதியவை எவை, மோட் கெனமன் எழுதியவை எவை, என்பதைக் கூற முடியாது! யாரோ 'ஒருவரே' அந்தப் பகுதியை தொடர்ந்து எழுதுவது போலவே தோன்றும். அவ்வளவு தூரத்துக்கு கருத்து, நடை ஆகிய எல்லா விஷயங்களிலுமே தொடர்பும், ஒருமைப்பாடும் இருக்கும்! கெனமன் தம்பதியர் 'ஒருமனம்' கொண்டவர்கள் என்பதற்கு இதைவிட வேறு என்ன சான்று வேண்டும்!

பதினாறு வயதுக்கு மேற்பட்ட பெண்கள் எல்லாருக்கும் கர்ப்பத் தடை மாத்திரைகளைக் கொடுக்க பிரித்தானிய தேசிய சுகாதார சேவையினர் முன்வந்திருக்கிறார்கள். 'கர்ப்பத்தடை மாத்திரைகளைப் பாவிக்கும் விஷயம் பெற்றோருக்கோ அல்லது குடும்ப டாக்டருக்கோ தெரிந்துவிடும் எனப்பயப்படத் தேவையில்லை' என்றும் இந்த ஸ்தாபனம் இந்தப் பெண்களுக்கு உறுதியளித்திருக்கிறது. கர்ப்பத்தடை மாத்திரைகளைத் தரும் விஷயம் மிகவும் ரக்சியமாக வைத்திருக்கப்படுமாம். பிரிட்டனிலுள்ள இளம் பெண்களில் இருபது வயதுக்கு முன்னர் திருமணம் செய்து கொள்வோரில் மூன்றில் ஒரு பகுதியினர் திருமணத்துக்கு முன்னரே கர்ப்பம் தரித்தவர்களாக இருக்கிறார்கள் என்றும், இந்த நிலையை ஒழித்துக்கட்டுவதுதான் தங்கள் நோக்கம் என்றும் இந்தச் சங்கத்தினர் அறிவித்திருக்கிறார்கள்.

உலகப் புகழ்பெற்ற ஓவியரான பிக்காஸோ சில விநோதமான பழக்கங்களுக்கு அடிமையானவர். இவர் சில ஆந்தைகளையும், புறாக்களையும், ஆடுகளையும் தனது வீட்டில் வளர்த்து வந்தார். இவரிடம் சில மூட நம்பிக்கைகளும் இருந்தன. கட்டிலின்மீது யாராவது தொப்பியைப் போட்டு வைத்திருந்தால் இவருக்குக் கடுமையான கோபம் வருவது வழக்கம். விரைவில் அந்த வீட்டில் யாரோ இறக்கப்போகின்றார்கள் என்பதை அது குறிக்கின்றதென்பது இவரது நம்பிக்கை!

● ● ●



● பாகிஸ்தானிலுள்ள தன்னிகரற்ற மக்கள் தலைவன் முஜிபுர் ரெஹ்மான்தான்! மேற்கு பாகிஸ்தானின் அடக்குமுறைகளுக்கு எதிராக கிழக்கு பாகிஸ்தான் மக்கள் முஜிபுர் ரெஹ்மான் தலைமையில் கிளர்ந்து எழுந்து விட்டார்கள்! மேற்கு பாகிஸ்தானியர்மொழி உருது; கிழக்கு பாகிஸ்தானியர்கள் பேசுவது வங்காளி! மதத்தின் காரணமாகப் பிறந்த பாகிஸ்தான் இப்போது மொழியின் காரணமாக மேற்கு பாகிஸ்தான், கிழக்கு பாகிஸ்தான் என்ற இரு நாடுகளாகப் பிரிந்து விட்டது! எப்போதுமே மொழி 'திணிப்பு' பிரிவினைக்குத்தான் வழி வகுக்கும்!

❀ தமிழ்க் கடவுளான முருகனுடைய வாகனங்கள் சேவலும் மயிலும் என்பது எல்லாருக்கும் தெரியும்! ஆனால் ஆடும், யானையும் கூட முருகனுடையவாகனந்தான் என்பது பலருக்குத் தெரியாத சங்கதி!

❀ 'அடுத்த வருடம் நடக்கவிருக்கும் அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் இவரும் போட்டியிடக் கூடும்' என்போருள் முக்கியமானவர் எட்வர்ட் கென்னடி. காலஞ்சென்ற ஜோன் கென்னடி, ரொபேட் கென்னடி ஆகியவர்களின் தம்பி இவர்! அமெரிக்க செனட்டில் 'கொறடா' வாக நீண்ட காலம் பதவி வகித்து வந்த இவர், சமீபத்தில் நடந்த 'செனட்சபை கொறடா தேர்தலில் சாதாரணமான ஒரு பைர்ட் என்பவரிடம் தோற்றுப் போய் விட்டார்! ஆமையும், முயலும் பந்தயம் ஓடிய கதைதான் ஞாபகத்துக்கு வருகிறது!

❀ அரசாங்கத்தின் கட்டுப்பாடுகளையும், கடுமையான விதிமுறைகளையும் எதிர்த்து சோவியத் ரஷ்யாவிலுள்ள விஞ்ஞானிகளும், இலக்கிய கர்த்தாக்களும் சிறிது சிறிதாக எதிர்ப்புக் குரல் கொடுக்கத் தொடங்கியிருக்கிறார்கள். இவர்களுள் மிகவும் குறிப்பிடத்தக்கவர் அலெக்ஸான்டர் சொலெனேற்சென் என்பவர்! இவர் ஒரு டாக்டர்! ஆனால் இன்றுள்ள சோவியத் நாவலாசிரியர்களுள் தலை சிறந்தவர்! சென்ற ஆண்டில் இலக்கியத்துக்கான நோபெல் பரிசு இவருக்குத்தான் கிடைத்தது!



● சிங்களத் திரை உலகின் கவர்ச்சிக் கன்னியாக இருந்தவர் சந்தியாகுமாரி. இவரது ஆரம்பகால வாழ்க்கை படுதுன்பம் நிறைந்தது. தனது திறமையினாலும், உழைப்பினாலும் முன்னுக்கு வந்து புகழேணியின் உச்சியில் இருந்தபோது எஞ்சினீயர் ஒருவரைக் காதலித்துத் திருமணம் செய்துகொண்ட இந்த நடிகை திருமணத்தின் பின் சினிமா உலகைவிட்டே விலகிவிட்டார். திருமணத்தின் பின் சில நாட்கள் ஒதுங்கி இருந்துவிட்டு, மறுபடியும் வந்து சினிமாக் குப்பைக்குள் விழும் நமது தமிழ் நடிகைகளான பத்மினி, சரோஜாதேவி போன்றோருக்கும் இவருக்கும் இடையில் எவ்வளவு வேறுபாடு!

# அண்ணா அறிந்த பெரியார்!

தேர்தல் சமயத்தில் 'மூட நம்பிக்கை ஒழிப்பு மாநாடு' என்ற பெயரில் இந்து மதத்தை இழிவு படுத்தும் முறையில் மாநாடும், ஆபாச பட ஊர் வலமும் நாடத்திய ஈ. வெ. ரா. எதிர்பார்த்த நேரங்களில் பர பரப்பான கருத்துக்களைத் தெரி வித்து தனது பெயரைப் பிர பலப்படுத்துவதில் வல்லவர்! போராட்டப் புலியாக வேஷம் போட்டாலும் எந்தக் காலத்தி லுமே ஆட்சியிலுள்ள அரசுக் குத் துதிபாடுவதுதான் இவரது வழக்கம்! தமிழ்நாட்டில் தேர் தல் முடிந்த பின்னரும் இவர் ஒரு 'புது'க் கருத்தை வெளி யிட்டிருக்கிறார்! 'மது மனித னுக்கு அவசியம்' எனவும், மது விலக்கை ஒழிக்க வேண்டும்' என் றும் பெரியார் கருத்துத் தெரி வித்திருக்கிறார். தமிழ்நாடு அர சாங்கம் மதுவிலக்கை நீக்கக்



கூடும் என எதிர்பார்த்து, ஆட்சி யாளர்களின் ஆதரவைப் பெறு வதற்காகத்தான் தானே முந் திக்கொண்டு இக் கருத்தை வெளியிட்டிருக்கிறார் பெரியார்! பெரியாரின் சுயநலத்தை நன் ருக உணர்ந்தவர் அண்ணாதான்! அதனால்தான் அவர் பெரியாரி டமிருந்து பிரிந்து சுயமாகச் செயல்படத் தொடங்கினார்!

பணத்துக்காகவும், வேறு பல காரணங்களுக்காகவும் திடீ ரென யாராவது ஒரு பிரபல மானவரைத் தூக்கிக் கொண்டு போய் மறைத்து வைத்திருக் கும் பழக்கம் இப்போது மேல் நாடுகளில் அதிகரித்து வருகி றது. இதனை எப்படித் தடை செய்வது என்பது தெரியாமல் திணறுகிறார்கள் அங்குள்ள அர சியல் தலைவர்கள்.

உலகிலேயே அதிக விளம் பரம் பெற்ற ஒரே நடிகை எலி ஸபெத் டெய்லர்தான். இவ ரைப்பற்றி எழுதாத பத்திரி கைகள் எந்த மொழியிலும் எந்த நாட்டிலும் இருக்க முடி யாது என்றே சொல்லலாம். இருந்தாலும், தன்னை எந்த பத் திரிகைக்காரராவது ஒதுக்குவது போல இவருக்குத் தோன்றி னால் அடங்காத கோபத்தை வெளிக்காட்டுகிறார்.

❁ காலி எம். பி. தகநாயக்கா மிகவும் கெட்டிக்காரர். அடிக்கடி மக்கள் இவரைப் பற்றிப் பேசக்கூடியதாக ஏதாவது செய்துகொண்டே இருப்பார்! தனது செயல்களினுலும், பேச்சுக்களினுலும் அடிக்கடி தனது பெயர் பத்திரிகைகளில் வரும்படியாகவும் பார்த்துக்கொள்ளுவார்! 'அரசியல்வாதிக்கு விளம்பரம் அவசியம்' என்ற தத்துவத்தை நன்ருக உணர்ந்து கொண்டவர் தகநாயக்கா!

❁ நாங்கள் பொதுவாகச் பசுப்பாலேயே உபயோகிக்கிரும். ஆனுல் உலகம் முழுவதிலும் கணக்கெடுத்தால் பசுப்பாலைவிட ஆட்டுப்பாலை அருந்துவோர் தொகையே அதிகம்! பசுப்பாலைவிட வெள்ளாட்டுப் பாலில் உடம்பை வளர்க்கும் கொழுப்பும் புரோட்டீனும் அதிகமாக உண்டு. பசுப்பாலைவிட வெள்ளாட்டுப்பால் எளிதில் செரிக்கும். நோயாளிக்கு மிக ஏற்றது வெள்ளாட்டுப்பாலே! ஆனுல் ஆட்டு வெண்ணெ அவ்வளவு நன்ருக இராது.

❁ அமெரிக்கா இன்று ஒரு பெரிய வல்லரசு. உலகின் மறு கோடியிலுள்ள நாடுகளின் 'சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்காக' அமெரிக்கா தனது படைகளை இன்று அனுப்பிக் கொண்டிருக்கிறது. ஆனுல் 200 ஆண்டுகளுக்கு முன்னுல் இதே அமெரிக்கா தனது சொந்த சுதந்திரத்தை நிலைநாட்டுவதற்காகத் திணறிக்கொண்டிருந்தது. 1770ல் போஸ்டனில் நடந்த ஒரு சுதந்திரக்கிளர்ச்சியை அன்றைய அமெரிக்காவின் எஜமானர்களான பிரிட்டிஷார் பலாத்காரமாக அடக்கினுர்கள்! 200 வருடங்களில் அமெரிக்காவின் வளர்ச்சி பிரம்மாண்டமானது! - பிரிட்டன் அமெரிக்காவை நோக்கி தனது சுண்டுவிரலைக் கூட அசைக்க முடியாது இன்று!


❁ பிரிட்டனில் பெண் பொலீஸ்காரர்கள் நிறையப் பேர் இருக்கிறுர்கள். பெண்கள் தானே என்ற நினைப்புடன் இவர்களிடம் யாராவது நடந்து கொள்ள முற்பட்டால் அவர்கள் ஏமாந்துவிட வேண்டியது தான்! இவர்களில் பலர் 'கராட்டி' 'ஜூடோ' போன்ற நுட்பமான சண்டை முறைகளில் தேர்ச்சி பெற்றவர்களாகவே இருக்கிறுர்கள். பெண்களை 'மெல்லியலார்' என்று நினைத்த காலம் மெல்ல மெல்ல போய்கொண்டு வருகிறது!

❁ உலகின் அணு ஆயுதங்கள் மற்ற நாடுகளுக்கு பரவாமல் இருக்கவேண்டுமென்று அமெரிக்காவும் ருஷ்யாவும் ஒரு சர்வதேச ஒப்பந்தத்தை உருவாக்கி அமல்செய்கின்றன. அணு ஆயுதங்களைத் தயாரிக்கும் ரகசியம் இப்போது சீனு, இந்தியா போன்ற நாடுகளுக்குங்கூட தெரிந்து விட்டபடியால் இந்த ஒப்பந்தத்தினுல் பலன் இல்லாமல் போய்விட்டது!

பேராதனையிலுள்ள இலங்கைப் பல்கலைக்களகத்தில் புதிய தமிழ்ப்பேராசிரியராகப் பதவி ஏற்றிருப்பவர் கலாநிதி சு. வித்தியானந்தன் அவர்கள்! இவர் விபுலானந்த அடிகளிடமும், கலாநிதி கணபதிப்பிள்ளையிடமும் தமிழ் கற்ற மாணவர்! 'இந்தப் பதவிக்கு இவர் வெகு பொருத்தமானவர்' என்று நமது யாழ்ப்பாணத்துப் பண்டிதமணியே மனமுவந்து பாராட்டியிருக்கிறார்! பண்டிதமணியின் பாராட்டைப் பெறுவது லேசான காரியமல்ல.

சோவியத் யூனியன் பொருளாதார உதவியும், தொழில் நுட்ப உதவியும் அளிப்பதாகக் கூறிக்கொண்டு எகிப்து நாட்டில் ஒரு பெரும் படைத்தளத்தையே நிர்மாணித்திருக்கிறது. ஐம்பதினாயிரத்துக்கும் மேற்பட்ட சோவியத் வீரர்கள் எகிப்து நாட்டில் இப்போது இருக்கிறார்கள். இந்த விஷயத்தில் பிரிட்டனையும், அமெரிக்காவையும் சோவியத் யூனியன் நன்றாக ஏமாற்றிவிட்டது'' என்று சமீபத்தில் வெகுவாகக் குறைப்பட்டுக் கொண்டிருக்கிறார் பிரிட்டிஷ் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர். புகழ் பெற்ற ஆங்கிலப் பிரதமரான வின்ஸ்டன் சர்ச்சிலினுடைய பேரன்தான் இவர்! இவருடைய பெயரும் வின்ஸ்டன் சர்ச்சில் தான்!

'காரட்' உடம்புக்கு மிகவும் நல்லது. ஆனால் 'காரட்'டை வாங்கும் போது முற்றியதாக அல்லாமல் பிஞ்சாகப் பார்த்து வாங்கவேண்டும். அதில்தான் சத்துங்கூட; சுவையுங்கூட!



இன்னிசைக் குயில் லதா மங்கேஸ்கரைத் தெரியாதவர்கள் இன்றில்லை. சமீபத்தில் திருப்பதி வெங்கடாசலபதி தேவஸ்தானத்தின் 'ஆஸ்தான இசையாள'ராகவும் இவர் நியமிக்கப்பட்டிருக்கிறார் இந்தலதா ஒரு காலத்தில் கூட்டத்தோடு கூட்டமாக 'கோரஸ்' பாடிக் கொண்டிருந்தவர். ஹிந்தி இசை அமைப்பாளர் நௌஷத் தற்செயலாக இவருடைய குரலினிமையைக் கவனித்து, தன்னை வந்து காணும்படி அறிவித்தார். நௌஷத்தைக் காண லதா சென்றபோது மழை பெய்தது கையில் குடை வைத்திருந்தும் லதா நன்றாக நனைந்துவிட்டார். காரணம், அந்தக் குடையில் ஆயிரம் பொத்தல்கள்! இன்று லதாவுக்குக் குடையே தேவையில்லை. குடை பிடித்துக் கொண்டு அவர் எங்கே எங்கே நடக்கப் போகிறார்!

❂ சோவியத் ரஷ்யாவிலுள்ள யூதர்கள் பலர் இஸ்ரேல் நாட்டில் சென்று குடியேற விரும்புகிறார்கள். இஸ்ரேல் நாடு இவர்களை வரவேற்கக் காத்திருக்கிறது ஆனால் சோவியத் அரசாங்கம் இவர்களை நாட்டை விட்டு வெளியேறவிடாது தடுத்து வைத்திருக்கிறது. சமீபத்தில் நூற்றுக்கு மேற்பட்ட யூதர்கள் ரஷ்யாவிலுள்ள பாராளுமன்றக் கட்டிடத்துக்கு முன்னால் 'சத்தியாக்கிரகம்' செய்தும் பார்த்தார்கள். பலன் கிடைக்கவில்லை. நல்ல உதைதான் கிடைத்தது. இந்தக் காலத்தில் சத்தியாக்கிரகம் செய்பவர்களுக்கு உதையைத் தவிர வேறு என்ன கிடைக்கும்!

❂ இந்தி நடிகர் ராஜ்கபூருக்கு சமீபத்தில் இந்திய அரசு "பத்மபூஷண்" விருதைக் கொடுத்து கௌரவப் படுத்தியிருக்கிறது. காலங் கடந்து அவருக்குக் கிடைத்த மரியாதை இது! ராஜ்கபூர் 20வது வயதிலேயே திரைப் படங்களில் நடிக்க வந்தார். 21வது வயதிலேயே படத் தயாரிப்பாளராகவும் டைரக்டராகவும் மாறினார். சோவியத் நாட்டில் இவருக்கு அமோகமான புகழ்! இவரைத் தெரிந்த அளவுக்கு வேறு எந்த இந்தியரையும் அங்கு தெரியாது! எல்லா நாடுகளிலுமே சினிமா நடிகர்களுக்கு ஒரு தனி மதிப்புத்தான்! சோவியத் ரஷ்யா மட்டும் இதற்கென்ன விதி விலக்கா?



❂ முன்னைநாள் பிரபல நட்சத்திரம் புஷ்பவல்லியின் மகள் தான் பானுரேகா. 'அஞ்சனா சபர்' என்ற ஹிந்திப் படத்தில் பிஸ்வஜித்சிங்குடன் முத்தக் காட்சியில் நடித்திருக்கிறார் இவர்! அப்படத்தின் டைரக்டர் தனக்குத் தெரியாமலே பிஸ்வஜித்துடன் பேசி, திடீரென்று தன்னை முத்தமிட வைத்ததாகக் கூறுகிறார் பானுரேகா. ஆனால், 'சினிமாவில் முத்தக் காட்சிகளை அனுமதிக்கலாம்' என்பதே தனது அபிப்பிராயமென்றும் கூறியிருக்கிறார். பானுரேகா என்ன, கலாச்சார ஒழுங்கு பேசும் எமது தமிழ்ப் பட நடிகைகள்கூட அனுமதியும் ஆதரவும் கிடைக்குமானால் நான் நீ என்று முத்தக்காட்சிகளுக்குத் தயாராகி விடுவார்கள்!


❂ மர்மப் பட மன்னன் என்று அழைக்கப்படும் தயாரிப்பாளர், டைரக்டர் அல்பிரட் ஹிச்காக் ஹாலிவுட்டின் விநோத மனிதர் என்று கருதப்படுகிறார். செட்டில் உள்ள எல்லா பிரகாசமான விளக்குகளும் இவர் பக்கம் திருப்பப்பட்டாலும் கொஞ்சமும் பாதிக்கப்படாமல் நிம்மதியாக இவரால் தூங்க முடியும்!

۞ உலகின் பிறப்பு விகிதா சாரத்தைப் பார்க்கும்போது 86 ஒற்றைப் பிள்ளைகளுக்கு ஒரு இரட்டைப் பிள்ளைகள் வீதம் பிறந்திருக்கின்றன. 7396 (86 × 86) பிள்ளைகளுக்கு ஒரு மூன்று பிள்ளைப்பேறு நடந்திருக்கிறது. 636056 (86 × 86 × 86) பிள்ளைகளுக்கு ஒரு நான்கு பிள்ளைப் பேறு நடந்திருக்கிறது. இது பெரிய விசித்திரமாக இல்லையா? ஆனால் என்ன நியதியில் இப்படி நடக்கிறதென்பது பெரிய பெரிய விஞ்ஞானிகளுக்கெல்லாம் புரியாத ஒரு மர்மமாகும்!

۞ ஊர்காவற்றுறைத் தொகுதியிலுள்ள எழுவைதீவைச் சேர்ந்த பெண்மணி ஒருவர் திருமணத்தின் போது எட்டாவது வரையுமே படித்தவராக இருந்தார். இரண்டு பிள்ளைகளின் தாயான பின்னர் எஸ். எஸ். சி. பரீட்சையில் தேர்ச்சியடைந்தார். இப்போது பத்துப் பிள்ளைகளின் தாயான பின்னர் பிரைவேட்டாகப் படித்து பட்டதாரியும் ஆகியுள்ளார்! இவருடைய குடும்பத்தின் வளர்ச்சியைப் போலவே இவருடைய கல்வி வளர்ச்சியும் இருக்கிறது!

۞ 'ஹாலிவூட்' சினிமா நடிகரான ஃபிராங் சினாட்ரா ஒரு சிறந்த பாடகருங் கூட! தனது 55 வயதுடன் படத்துறைக்கு முழுக்குப் போட்டுவிட்டு நிம்மதியாக இருக்கப்போவதாக அறிவித்திருக்கிறார் சினாட்ரா. 'படத்துறையில் இருந்தால் நிம்மதி இல்லை' என்பதுதானே இதன் அர்த்தம்!

● அசைக்க முடியாத பலத்தோடு இப்போது இந்தியாவின் பிரதமராக இருக்கிறார் இந்திராகாந்தி! இந்திய அரசியலில் முன்னர் ஜவஹர்லால் நேருவுக்கு இருந்த இடம் இப்போது நேருமகள் இந்திராவுக்குக் கிடைத்துவிட்டது! இந்திராவின் பாட்டனார் மோதிலால் நேருவுங்கூட இந்திய அரசியலில் ஒரு தன்னிகரற்ற தலைவராக இருந்தவர்தான்! நேரு



குடும்பம் பரம்பரை பரம்பரையாக அரசியலில் செல்வாக்கு மிக்க குடும்பம்! ஆனால் இந்திராவின் மக்களோ- மூத்த மகன் சஞ்சீவ் காந்தி, சிறியகார் உற்பத்திச்சாலை ஒன்றைத் தொடங்குவதில் மும்மரமாக இருக்கிறார்! இரண்டாவது மகன் ராஜீவ் காந்தி இந்தியன் ஏர்லைன்ஸ் கார்ப்பரேஷனில் ஒரு விமானியாகக் கடமையாற்றுகிறார்! இவர்கள் இருவரும் இன்னமும் அரசியலில் பிரவேசிக்கவில்லை. எதிர்காலத்தில் நிச்சயம் இவர்களும் அரசியலில் பிரவேசிப்பார்களென நாம் எதிர்பார்க்கலாம்! பரம்பரைக் குணம் விட்டுப் போகுமா?

உண்மைக்கதை

செய்திக்கதை

# அழகி சஹரானுஸ்

"ஜனக மஹாராஜன்"

இந்தியாவிலுள்ள உத்தரப் பிரதேசத்தில் பிறந்த ஸாய்தி பாகிஸ்தானில் குடியேறியதன் மூலம் பாகிஸ்தானையே தனது தாயகமாக்கிக் கொண்டவர். சிறு வயதிலேயே கவிதைகள் எழுதுவதில் வல்லவரான இவர், பாகிஸ்தானின் சிறந்ததொரு கவிஞராகப் பரிணமிக்கத் தொடங்கினார். அதிர்ஷ்டமும் இவருக்குத் துணைசெய்தது. பாகிஸ்தானிலுள்ள சிவில் சேவை அதிகாரிகளுக்கான பரீட்சையில் தேறியதனால் இவருக்கு ஒரு உயர்ந்த உத்தியோகமும் கிடைத்தது.

உயர்ந்த பதவியும், கவிஞர் என்ற முறையில் கிடைத்த புகழும் சேர்ந்து இவரை சமூகத்தின் மேல் மட்டத்துக் கொண்டு சென்றன. நாட்டிலுள்ள பெரும் புள்ளிகளோடெல்லாம் பழகும் வாய்ப்பு இவருக்குக் கிடைத்தது. அரசியல் வாதிகள், தொழில் அதிபர்கள், புதுப் பணக்காரர்கள், உயர் மட்டத்திலுள்ளோருக்குப் பல விதத்திலும் உதவி செய்யும் 'தரகுப் பேர்வழிகள் என்றபலர் இவரின் நண்பர்களானார்கள்.

இந்தச் சமயத்தில்தான், சஹரானுஸ் என்ற பெண்ணை ஸாய்தி சந்தித்தார். சலீம்கான் என்பவரின் மனைவிதான் சஹரானுஸ்! இவளிடம் அழகு இருந்தது; இளமை இருந்தது; குறும்புத்தனம் இருந்தது; ஒருவகையான ஒயிலும் இருந்தது. இவளுடைய முகத்தில் ஒருவகையான 'குழந்தைப் பிள்ளைத்தனம்' இருந்தபோதிலும், உள்ளம் அவ்வளவு தூரம் பரிசுத்தமானது அல்ல.

சலீம்கான் தனது மனைவியை ஸாய்திக்கு அறிமுகம் செய்து வைத்தார். சஹரானுஸைப் பார்த்த மாத்திரத்திலேயே ஸாய்திக்கு ஒருவகையான மயக்கமும் கிறக்கமும் ஏற்பட்டுவிட்டன.

ஸாய்தி தன்னைப் பார்த்து மயங்கிவிட்டார் என்பதைக் கண்டபோது அழகி சஹரானுஸுக்குப் பெருமை பிடிபட முடியவில்லை. மெதுவாக அவளும் அவர்மீது தனது 'கண் வீச்சை'ச் செலுத்தத் தொடங்கினாள்.

சஹரானுஸின் கணவன் சலீம்கானுக்கும் இந்த விஷயத்

தில் குறையேதும் இருக்கவில்லை. உயர்ந்த அரசாங்க உத்தியோகத்தரான ஸாய்தியின் தயவை தனது வியாபார விஷயங்களில் பல வழிகளிலும் எதிர்பார்த்திருந்த சலீம்கானுக்கும் இந்த உறவு வசதியாகவே இருந்தது.

ஆனல்,

ஸாய்தி ஒரு கவிஞன்; உண்மையான கவிஞன். அவனைப் பொறுத்த மட்டில் அவனுக்கும் சஹானுஸுக்கும் இடையிலான 'தொடர்பு' வெறும் தொடர்பாக இருந்துவிடவில்லை. அது ஒரு உணர்ச்சி மிக்க காதலாகவே பரிணமித்தது.

பாகிஸ்தானின் முன்னுள் சர்வாதிகாரி அயூப்கானின் அன்புக்குரிய உத்தியோகத்தருள் ஒருவர்தான் ஸாய்தியும். அயூப்கானின் பதவி பறிபோனபோது அவரது அன்புக்குப் பாத்திரமாயிருந்த பல உத்தியோகத்தர்களது பதவிகளும் பறிபோயின. ஸாய்தியும் தனது உத்தியோகத்தை விட்டுவிலக நேர்ந்தது.

இதன் காரணமாக லாகூரிலுள்ள உதவிக் கமிஷனர் பங்களாவைக் காலி செய்துவிட்டு, கராச்சிக்குப் பக்கத்திலுள்ள ஒரு சிறு நகரத்திலுள்ள ஒரு சிறிய வீட்டில் குடியேற வேண்டிய நிலை ஸாய்திக்கு ஏற்பட்டது. காராச்சிக்கு ஸாய்திவந்த போது அவரோடு கூடவே சஹானுஸும் கராச்சிக்கு வந்தாள்.

ஆனல்,

கராச்சியில் இவர்களது காதல் வாழ்க்கை சோபிக்கவில்லை. பதவியிலிருந்து இறக்கப்பட்ட ஸாய்தியிடம் சஹானுஸுக்கு இருந்த காதல் கொஞ்சம் கொஞ்சமாகக் குறையத் தொடங்கியது.

1970-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் திடீரென்று சஹானுஸ் ஐரோப்பாவுக்குப் பயணமானுள். இவள் மூன்று வாரங்களுக்குமேல் அங்கு தங்கினுள்.

இந்த நாட்களில்,

ஸாய்தி இவளுக்கு எழுதிய கடிதங்கள் எதற்குமே இவள் பதில் எழுதவில்லை. பாகிஸ்தானுக்குத் திரும்பி வந்த பின்னரும் ஸாய்தியைச் சந்திப்பதைத் தவிர்த்துக்கொள்ளவே இவள் முயற்சி செய்துவந்தாள்.

ஆனல்,

சென்ற அக்டோபர் 11-ம் தேதி கடைத்தெரு வழியாக ஸாய்தி சென்றுகொண்டிருந்தபோது தற்செயலாக சஹானுஸைக் கண்டார். பழைய காதல் நாட்களைக் கிண்டிக் கிளறிய இவரது நச்சரிப்பைத் தாங்கமுடியாத சஹானுஸ் மறுநாள் இவரைச் சந்திப்பதற்கு ஒப்புதல் தந்தாள்.

மறுநாள்—

சஹானுஸ் ஸாய்தியைச் சந்தித்தபோது, பழைய நாட்க

ளில் ஒன்றுபோலவே காதல் நிரம்பிய தினமாக அது இருந்தது.

இவர்கள் இருவரும் இன்ப மயக்கத்தில் இருந்த அந்த நேரத்தில் கதவு தட்டப்படும் ஓசை கேட்டது. ஸாய்தி கதவைத் திறந்தபோது தபாற்காரன் நின்றுகொண்டிருந்தான். அவனிடமிருந்து கடிதத்தைப் பெற்றுக்கொண்டு திரும்பிய ஸாய்திக்கு அக் கடிதத்தை முற்றுக உடைத்துப் படிப்பதற்குக்கூட பொறுமை இருக்கவில்லை.

லேசாக உடைத்து அது யாரிடமிருந்து வந்திருக்கின்றதென்பதைப் பார்த்துவிட்டு மறுபடியும் சஹானுஸிடம் ஸாய்தி வந்தபோது,

அவர்களின் இன்பத்துக்குக் குறுக்கிடுபோல மறுபடியும் கதவு தட்டப்படும் ஓசை கேட்டது.


இந்தத் தடவை கதவைத் தட்டியது ஸாய்தியின் மருமகன்.

மாலையில் விமான நிலையத்திலுள்ள நீச்சல் குளத்தடியில் சந்திப்பதாகக் கூறி மருமகனையும் வழியனுப்பி வைத்தார் ஸாய்தி.

ஸாய்தியின் மருமகனும், தபாற்காரனும்தான் கடைசியாக ஸாய்தியை உயிரோடு கண்டவர்கள்.

ஸாய்தியின் மருமகன் அவரது வரவுக்காக நீண்டநேரம் விமான நிலையத்திலுள்ள நீச்சல் குளத்தடியில் காவல் இருந்தான். ஸாய்தி வரக் காணுததால் நள்ளிரவுபோல ஸாய்

★ ★ ★ ★ ★



அரசியல் உலகைப்போல தமிழ் சினிமா
போட்டிகள் மிக வேகமாக வளர்ந்து வருகின்
கட்சிகள் இருந்த போதிலும் இரண்டு கட்சிகள்
எம். ஜி. ஆர். கட்சி ஒன்று. மற்றது சிவாஜி

★ அரசியல் கட்சி ஆதரவாள
மாக் கட்சி ஆதரவாளர்களின்
ளெல்லாரும் இளைஞர்களாயிருப்

யாருடைய படம் அதிகநாள் ஓடுகிறது
சலையெல்லாம் இந்த இளைஞர்கள் மிருந்த
ருர்கள் தங்கள் கட்சி நடிகர்தான் அதிகம்
இந்த இளைய ரசகர்களின் பெருமைக்குரிய ஒரு விஷயமாக இருக்கிறது.

★ தமிழ் சினிமா உலகில் இன்று தனது நடிப்புக் கூலியாக பெ
பவர் எம். ஜி ஆர்தான்! இவருக்கு அடுத்தபடியாக இருப்பவ
தொகையைப்போல ஏழு, எட்டு மடங்கு தொகை வாங்குகிறுர்
ஷஸ்'களால் வரும் வருமானம் எம். ஜி. ஆரைக் காட்டிலும் சிவ

திக்கு டெலிபோன் செய்து பார்த்தான். டெலிபோன் 'எங்கேஜ்'டாக இருந்தது.

மறுநாள் காலையில் ஸாய் தியின் மருமகன் அவரது வீட்டுக்குச் சென்று பார்த்தபோது, வீடு உட்புறம் பூட்டியிருந்தது. ஒருவரது நடமாட்டத்தையும் காணவில்லை. இது சந்தேகம் தருவதாக இருந்தமையால் அவன் இதனை அதிகாரிகளுக்கு அறிவித்தான்.

பொலீஸார் வந்து கதவை உடைத்துப் பார்த்தபோது,

ஸாய்தி கட்டிலில் இறந்து கிடந்தார்!

கட்டில் மிகவும் குழம்பிய நிலையில் கிடந்தது. இரண்டு தலையணைகள் முழுவதும் ரத்தம் தோய்ந்த நிலையில் காணப்பட்டன. கட்டிலின்மீது நிறைய 'நப்தலீன்' உருண்டைகள் கிடந்தன. அறையில் 'ஏர் கண்டிஷனர்' வேலை செய்துகொண்டிருந்தது. கட்டிலுக்குப் பக்கத்திலிருந்த மேஜையொன்றில் ஒரு கடிதம் லேசாக உடைக்கப்பட்ட நிலையில் காணப்பட்டது. அக் கடிதம் ஜெர்மனியில் இருக்கும் ஸாய்தியின் மனைவியிடமிருந்து வந்திருந்தது.

படுக்கை அறைக்குப் பக்கத்திலிருந்த வரவேற்பு அறையில் சோபா ஒன்றில் சஹானூஸ் மயக்கமாகக் கிடந்ததையும் பொலீஸார் கண்டனர்.

முதலில் பார்த்தபோது,

இது ஒரு தற்கொலை முயற்சி போலவும், அந்த முயற்சியில் ஒருவர் இறந்து விட்டதாகவும், மற்றவர் தப்பிவிட்டதாகவும் தோன்றியது!

சஹானூஸ் ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டு அங்கு பூரணமான சோதனைக்கு உட்படுத்தப்


★ ★ ★ ★ ★

உலகிலும் இன்று கட்சிப் றன, பல நடிகர்களுக்குக் தான் முக்கியமானவை. கட்சி.

ளின் ஆரவாரங்களைவிட இந்த சினி ஆரவாரம் மிகமிக அதிகம்! இவர்க தே இதற்குக் காரணம்.

ன்பன போன்ற விஷயங் க்கரையோடு விவாதிக்கி சம்பாதிக்கிறார் என்பதும்

பருந் தொகைப் பணத்தைப் பெறு ரே சிவாஜி. சிவாஜி வாங்குகின்ற எம். ஜி. ஆர்.! ஆனால் வேறு 'பிஸி ாஜிக்குத்தான் அதிகம்!



பட்டாள். அவளது வயிற்றிலிருந்த பொருட்களைச் சோதித்த போது தூக்க மாத்திரைகளை அவள் உட்கொண்டிருப்பது தெரியவந்தது. ஆனால் ஸாய்தியின் உடலைப் பிரேத பரிசோதனை செய்தபோது அவர் கடுமையான நஞ்சுப்பொருளை உட்கொண்டிருப்பது தெரிய வந்தது.

தற்கொலை முயற்சியானால் எதற்காக ஒருவர் தூக்க மாத்திரைகளையும் மற்றவர் கடுமையான நஞ்சுப் பொருளையும் உட்கொள்ளவேண்டும்?

கொலையா? தற்கொலையா?

இதுவுமல்லாமல் பிரேத பரிசோதனையின் போது ஸாய்தி கடுமையான மூச்சுத் திணறலினால் இறந்திருக்க வேண்டும் என்பதும் தெரிய வந்தது!

ஸாய்தியை மூச்சுத் திணறச் செய்தவர்கள் யார்?

மூன்றாவது மனிதர் ஒருவரும் இதில் சம்பந்தப்பட்டிருப்பாரா? அப்படியானால் சஹானாஸ் ஏன் அவருடன் வெளியேறவில்லை?

ஒரு சமயம்,

ஸாய்தியே தனது மரணத்தின் பின்னர் சஹானாஸை மாட்டிவைக்கக் கூடிய முறையில் திட்டங்கள் தீட்டியிருப்பாரா?

சந்தர்ப்ப சாட்சியங்கள் சஹானாஸுக்கு எதிராக இருந்தமையால் பொலீஸார் சஹானாஸைக் கைது செய்தனர்!

1956ம் ஆண்டில் ஸாய்தி லண்டனில் இருந்தபோது ஜெர்மனியப் பெண்ணான வீரா என்பவரைச் சந்தித்தார். ஸாய்தி பாகிஸ்தானுக்குத் திரும்பியபோது வீராவும் அவர் கூடவே வந்தாள். 1957ம் ஆண்டில் அவர்கள் திருமணம் செய்து கொண்டார்கள். அவர்களுக்கு இரண்டு குழந்தைகளும் பிறந்தன. தனது பதவி பறிபோனதும் ஸாய்தி தனது மனைவி வீராவை ஜெர்மனிக்கு அனுப்பிவைத்தார். ஸாய்தியின் திட்டம்-தானும் ஜெர்மனிக்குச் சென்று விடுவது என்பதுதான்! ஆனால் பாகிஸ்தான் புதிய அரசாங்கம் ஸாய்தி நாட்டை விட்டு வெளியேறுவதைத் தடை செய்திருந்தபடியால் அவரால் ஜெர்மனிக்குச் செல்ல முடியவில்லை.

ஜெர்மனியிலிருந்த ஸாய்தியின் மனைவி வீரா, கணவன் இறந்த செய்தியைக் கேட்டதும் பாகிஸ்தானுக்குப் பறந்தோடி வந்தாள். வீரா பத்திரிகைக் காரர்களிடம் பேசும் போது ஸாய்தி தற்கொலை செய்து கொள்ளவில்லையென்றும், நிச்சயமாக அது கொலை தான் என்றும் சாதித்தாள். விசாரணைகளின் போது பொலீஸ் அதிகாரிகள் நடந்து கொண்ட முறைபற்றியும் பல

மாக தனது அதிருப்தியை வீரா தெரிவித்தாள்.

"எனது கணவர் திருமணத்திற்கு முன்னரும் பின்னரும் பல பெண்களோடு தொடர்பு கொண்டிருந்தது உண்மைதான்! எனக்கும் இந்த விஷயங்கள் நன்றாகவே தெரிந்திருந்தன! ஆனால், இந்த விஷயங்களினால் எங்கள் இருவருக்கும் இடையிலான உறவு எந்த விதத்திலும் பாதிக்கப்பட்டிருக்கவில்லை" என்று வீரா கூறிய செய்திகள் பாகிஸ்தான் பத்திரிகைகளில் பிரமாதமாக வெளியிடப்பட்டன.


"சஹரானுஸ் மட்டுமல்ல, இன்னும் பலர்-மில் அதிபர்கள், கடத்தல் பேர்வழிகள், உயர் மட்டத்தில் உலவும் அதிகாரிகள்-எனது கணவரின் கொலையில் தொடர்பு கொண்டிருக்கிறார்கள்" என்று வீரா சாதித்தாள்.

இந்தக் கூற்று உண்மை என்பது போல,

ஸாய்தி இறந்த சில நாட்களுக்குள், ஸாய்தியின் சகோதரர் ஒருவர் ஒரு மோட்டார் 'விபத்'தில் கொல்லப்பட்டார்! 'விபத்து' என்று கூறப்பட்ட போதிலும், இதுவும் திட்டமிட்டுச் செய்யப்பட்ட கொலையென்றே பலரும் சந்தேகித்தார்கள். இது போதாதென்று ஸாய்தியின் நெருங்கிய நண்பர் ஒருவர்-பட்டப்பகலில் லாகூர் வீதிகளில் பயங்கரமாகக் கொல்லப்பட்டார்.

ஸாய்தி கொலை செய்யப்பட்ட அந்த இரவு நேரத்தில் அவரது கார் 'கராஜ்' உடைக்கப்பட்டிருந்ததையும் பொலீ

● ● ● ●



● தமிழ்நாட்டு முதலமைச்சர் கலைஞர் கருணாநிதியிடம் அபாரமான சுறுசுறுப்பு இருக்கிறது. ஓய்வு, ஒழிச்சலின்றி எந்தநேரமும் ஏதாவது செய்துகொண்டிருப்பதில் இவர் வல்லவர். சின்னஞ்சிறு விஷயங்களிலும் அக்கறை செலுத்துவது இவருக்கு இயல்பாகவே அமைந்த குணம். அரசாங்க அலுவல்கள், கட்சிப் பணிகள் என்பனவற்றைக் கவனித்து வரும் கலைஞர் கருணாநிதி 'குமுதம்' பத்திரிகையில் 'ரோமாபுரிப் பாண்டியன்' என்ற தொடர் கதையையும் எழுதி வருகிறார். இந்தக் கதை சரித்திரக் கதையானாலும் இதில் வரும் பாத்திரங்கள் எல்லாம் இன்றைய அரசியல் பேசும், கொள்கை விளக்கும் பாத்திரங்களாகவே இருக்கின்றன. O O

ஸார் கண்டுகொண்டார்கள் அந்த 'கராஜி'ல் வைக்கப்பட்டிருந்த பல பெட்டிகள் உடைக்கப்பட்டு, அவற்றுக்குள் இருந்த பல பொருட்கள் வெளியே வீசப்பட்டுக்கிடந்தன. அப்படி வீசப்பட்டுக் கிடந்த பொருட்களில் பல போட்டோக்களும் இருந்தன. அந்தப் போட்டோக்களில், சஹாரனுஸ் நிர்வாண மான நிலையில் பல்வேறு 'போஸ்'களில் காணப்பட்டாள்! இந்தப் போட்டோக்கள் யாரால் எடுக்கப்பட்டன? எப்படி அங்கு வந்து சேர்ந்தன?

ஸாய்திதான் இந்தப் போட்டோக்களை எடுத்து வைத்திருந்தாரா? அல்லது பொலீஸாரின் கண்களில் மண்ணைத் தூவுவதற்காக வேறு யாராவது இவற்றை அங்கு போட்டிருப்பார்களா? இதில் சஹாரனுஸின் பங்கு என்ன?

"நான் இந்த நாட்டை விட்டு வெளியேற நேர்ந்தால், பல பெரிய புள்ளிகளின் அந்தரங்கங்களை அம்பலமாக்குவேன்; பல பெரிய புள்ளிகள் வெளிச்சத்துக்கு வர நேரிடும். கள்ளக் கடத்தலிலும் வேறு பல சங்கதிகளிலும் ஈடுபட்டிருக்கும் பல பெரிய புள்ளிகள் யார் யாரென்பதை தகுந்த சாட்சியங்களுடன் நிரூபிப்பேன்" என்று ஸாய்தி சில நாட்களுக்கு முன்னர் தனது நண்பர்களிடம் சொல்லியதாக செய்திகளும் வெளிவரத் தொடங்கின.

பொலீஸாரினால் கைது செய்யப்பட்ட அழகி சஹாரனுஸ் பல முரண்பட்ட வாக்குமூலங்களை அளித்தாள்.

ஸாய்தியின் கொலையைப் பற்றி முதலில் தனக்கு எதுவுமே தெரியாதென்று சாதித்த சஹாரனுஸ் பின்னர் தாங்கள் ஈடுபட்டிருந்தது தற்கொலை முயற்சிதான் என்று கூறினாள். வேறொரு சமயம், தான் ஸாய்தியின் வீட்டில் இருந்தபோது தனக்கு அவர் பழரசம் அருந்தத் தந்ததாகவும், அதன்பின் நடந்தது என்னவென்றே தனக்குத் தெரியாது என்றும் கூறினாள். இன்னொரு சந்தர்ப்பத்தில், தானே ஸாய்தியை நஞ்சூட்டிக் கொன்றதாகவும், வேதனையால் துடித்துக் கொண்டிருந்த ஸாய்தி டாக்டருக்குப் போன் செய்ய முயற்சித்ததாகவும், தான் அந்தச் சமயத்தில் அவரிடமிருந்து போனைப் பறித்து விட்டதாகவும் கூறினாள்.

பொலீஸார் சஹாரனுஸை ஒரு பெண்கள் ஜெயிலில் காவலில் வைத்திருந்தனர்.

ஜெயிலில் இருந்தபோது முதலில் சில நாட்களுக்கு அவளுக்குக் கஷ்டமாகவே இருந்தது. அவள் ஜெயிலில் கொடுக்கப்பட்ட துணிகளைத் தூக்கி எறிந்ததோடு, ஜெயில் உணவை உட்கொள்ளவும் மறுத்தாள் ஆனால் சில நாட்கள் சென்றதும், நல்ல படுக்கைகளை வீட்டிலிருந்து வரவழைத்துக்

கொள்ள அவளுக்கு அனுமதி அளிக்கப்பட்டது. நல்ல உண வும் கொடுக்கப்பட்டது. மெது வாக, வேறு பல வசதிகளும் அளிக்கப்பட்டன.


பாகிஸ்தானிலுள்ள 'பெரும் புள்ளி'களில் பலர் மாறுவேட மணிந்து, பெண்கள் உடையில் ஜெயிலினுள் சென்று சஹானு ஸைச் சந்தித்ததாகவும் அதன் பின்னரே சஹானுஸுக்கு பல வசதிகள் கிடைத்ததாகவும் பொதுவாக கதை அடிபட்டது.

பொதுமக்கள் பலரும், பத் திரிகைகளும் இந்த விஷயத்தில் அக்கறை காட்டத் தொடங்கி யதால் கடைசியில் பாகிஸ் தான் உயர்நீதி மன்றமே இந்த 'கேஸில்' தலையிட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. முஸ் டாக் அஹம்மது என்ற உயர் பொலீஸ் அதிகாரியின் தலைமை யிலான புதிய பொலீஸ் கோஷ்டி யிடம் இவ்வழக்கை விசாரிக்கும் பொறுப்பு ஒப்படைக்கப்பட் டது. தன்னை பிணையில் செல்ல அனுமதிக்க வேண்டும் என்ற சஹானுஸின்மனுவும் நிராகரிக் கப்பட்டது.

புதிய பொலீஸ் கோஷ்டி பல புதிய சாட்சியங்களை விசா ரணை செய்தது. இந்த விசார ணைகளில் பல உண்மைகள் வெளியாயின. ஒவ்வொரு மாத மும் ஐயாயிரம் ரூபாவுக்குமேல் பெறுமதியான துணிமணிகளை தனது கடையிலிருந்து சஹா னுஸ் வாங்கியதாக கடைக்கா ரர் ஒருவர் தெரிவித்தார்.

லண்டனில் இருந்தபோது ''மிஸ்டர் டேவிஸ்'' என்று அழைக்கப்படும் சர்வதேசப்

● ● ●



● மந்திரி இலங்கரத்தின அரசியலுக்கு வருவதற்கு முன்னர் 'கிளறிக்கல்' உத் தியோகத்தில் இருந்தவர். அந்த நாட்களிலேயே தொழிற்சங்க நடவடிக்கை களில் ஈடுபாடு உடையவர். அந்த நாட்களில் நடந்த ஒரு வேலை நிறுத்தத்தின் போதுதான் இவரது கூட் டாளியான கந்தசாமி என்ற தமிழர் பொலிசாரின் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானார்! இலங்கரத்தின இப்போது மந்திரியாகிவிட் டார். கந்தசாமியை மக் கள் மறந்துவிட்டார்கள். மந்திரி இலங்கரத்தினவுக் காவது கந்தசாமியின் நினைவு இருக்கிறதா என் பது தெரியவில்லை! ❋❋

புகழ்பெற்ற கடத்தல்பேர்வழி ஒருவருடன் பல சமயங்களில் அழகி சஹறானுஸ் காணப்பட்டதாக இன்னொரு சாட்சி தெரிவித்தார்.

கடத்தல் குற்றச்சாட்டுகளின் பேரில் லண்டனில் கைது செய்யப்பட்டு ஜெயிலுக்கு அனுப்பப்பட்ட ஸெரீர் காதர் என்ற பெண்ணுடன் தனக்கு நட்பு இருந்ததாக சஹறானுஸும் ஒப்புக் கொண்டாள்.

சஹறானுஸ் லண்டனிலிருந்து திரும்பி வந்தபோது பாகிஸ்தான் அரசாங்கத்தின் ஏற்றுமதித் திணைக்களத்தைச் சேர்ந்த மூன்று அதிகாரிகளும், ஒரு உயர்தர பொலீஸ் அதிகாரியும் அவளைச் சந்தித்து அவளுக்குப் பல வழிகளிலும் உதவிசெய்த உண்மைகளும், அந்தப் பொலீஸ் அதிகாரிதான் ஸாய்தியின் மரணம் பற்றி முதலில் விசாரணை நடத்தியவர் என்பதும் இந்த விசாரணைகளின் போது தெரியவந்தன.

இந்த விசாரணைகளின் விளைவாக-

இப்போது.

கவிஞனும் ரஸிகனுமான ஸாய்தியைக் கொலை செய்ததாக அழகி சஹறானுஸ் குற்றஞ் சாட்டப் பட்டிருக்கிருள்!

விசாரணை முடிவில் குற்றவாளியாகக் காணப்பட்டால், பாகிஸ்தானின் 'கிறீஸ்டீன் கீல'ரான சஹறானுஸுக்குத் தக்க தண்டனை கிடைக்கும்!

இந்த வழக்கின் முடிவு இன்னமும் வெளியாக வில்லை!

நன்றி: இலஸ்ரேட்டட் வீக்லி ஒவ் இந்தியா.

'குமுதம்' பத்திரிகை 'செட்டியார்கள்' நடத்தும் பத்திரிகை, அரசியலோ, சினிமாவோ எந்த விஷயமானுலுஞ் சரி கொஞ்சம் 'பொடி'வைத்து எழுதும் பழக்கம் குமுதத்துக்கு உண்டு. ஆனுல், ஏ. வி. மெய்யப்ப செட்டியாரையும், கண்ணதாசனையும் அதிகம் தாக்காது சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் 'தூக்கி' விடும் பழக்கம் குமுதத்துக்கு உண்டு. இதற்குக் காரணம் இவர்கள் இருவரும் 'செட்டியார்' குலத்தைச் சேர்ந்தவர்களாக இருப்பதாக இருக்கலாம்! ஆனுல், முன்னர் சினிமா நடிகை ஜமுனு பற்றியும், இப்போது சினிமா நடிகை கே. ஆர். விஜயா பற்றியும். செய்திகள் வெளியிடும் போது சிறிது 'பரிவு' காட்டியே செய்திகளை வெளியிடுகிறது 'குமுதம்'! இதற்குக் காரணம் என்ன என்பது ஆண்டவனுக்கே வெளிச்சம்!

ஒவ்வொரு நாளும் சில மைல் தூரம் நடப்பது உடம்புக்கு நல்லது. நடக்கும்போது உடலின் மூலை முடுக்குகளுக்கெல்லாம் இரத்தம் செல்லுகிறது. இதனுல் இருதயம் பலமடைகிறது; பல நோய்கள் வராமல் இருக்க துணை செய்கின்றது. நடக்கும்போது இடுப்புப் பகுதிக்குக் கீழுள்ள கால் பகுதி முழுவதையும் நன்கு வீசி, நன்ருக நிமிர்ந்து நடக்க வேண்டும். அப்பொழுதுதான் முழுப் பலனும் கிடைக்கும்.

கலைஞர் கருணுநிதியின் ஒரு மகனுக்கு என்ன பெயர் தெரியுமா, -ஸ்டாலின்! கவிஞர் கண்ணதாசனின் ஒரு மகனுக்கு என்ன பெயர் தெரியுமா - அண்ணுத்துரை!



# ராமன் எத்தனை ராமனடி!

சமஸ்கிருத மொழியில் வால்மீகி ராமாயணத்தை விட வேறுபல ராமாயணங்களும் உண்டு. இவற்றில் 'பௌத்த ராமாயணம்" என்பதும் ஒன்று. இந்த ராமாயணக் கதை மிக வேடிக்கையானது. தசரதனுடைய மனைவியருள் ஒருத்தியின் பிள்ளைகளே ராமன், லட்சுமணன், சீதை ஆகியோர். இன்னொரு மனைவியின் மகன் பரதன். இந்த ராமாயணத்திலும் பரதனின் தாயாருடைய தலையீட்டால் ராமனின் முடிசூட்டு விழா தடைப்பட்டு, தந்தையின் வார்த்தையைக் காப்பாற்ற அவன் கானகம் செல்கிறான். அவனுடன் லட்சுமணனும் சீதையும் செல்கின்றனர். (இராவணனைப் பற்றிய செய்தி ஒன்றும் இந்த ராமாயணத்தில் கிடையாது!) குறித்த காலம் முடிந்ததும், பரதனுடைய வேண்டுகோளின்படி ராம, லட்சுமண, சீதையர் நாட்டுக்குத் திரும்புகின்றனர். ராமன் தனது சகோதரி சீதையை மணம் முடித்து அரசையும் ஏற்கிறான்! புத்தர் பிறந்த சாக்கிய குலத்தில் சகோதரன் சகோதரியை மண முடிக்கும் வழக்கம் இருந்ததாம்! இந்த பௌத்த ராமாயணம் வால்மீகி ராமாயணத்துக்கு முந்தியதா பிந்தியதா என்று தெரியவில்லை!

சோஷலிஸம் என்றால் என்ன?—எல்லாருக்கும் வேலை வாய்ப்பு. சமூக, பொருளாதார துறைகளில் எல்லாருக்கும் சம நீதி என்பனதான்! இத்தோடு சமூகத்திலுள்ள பல்வேறு பிரிவினரிடையே எந்தவிதமான பிணக்குகளும் ஏற்படாமல் பார்த்துக்கொள்ளவும் வேண்டும். சோஷலிஸமோ எந்த 'இஸமோ' - எந்த நல்ல அரசாங்கத்தினுடைய கடமையும் இதுதான் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது!

அப்பல்லோ 14-ல் சந்திர மண்டலத்துக்குப் போய்வந்தவர்களில் ஒருவர் அலன் செப்பர்ட்! இந்தப் பிரயாணத்தின் போது 'காப்டன்' பதவி வகித்தவர் இவர்தான்! இவருக்கு இப்போது 47 வயதாகின்றது. இவர் ஒரு பெரும் பணக்காரர். இவருக்கு இருக்கும் சொத்துக்களின் பெறுமதி ஐந்து லட்சம் அமெரிக்கன் டாலர்களுக்கு அண்மையில் இருக்குமென மதிப்பிடப்படுகின்றது!

உலகப் புகழ்பெற்ற ஆங்கில நாவலாசிரியர் ஆர். கே. நாராயணன்! இவருடைய சகோதரர்தான் சிறந்த கார்ட்டூனிஸ்டான ஆர். கே. லட்சுமண்! இந்த லட்சுமண்தான் பிரபல பரதநாட்டிய நங்கையான குமாரி கமலாவைத் திருமணம் செய்தவர். பின்னர் இந்தத்திருமணம் விவாகரத்தில் வந்து முடிந்தது! சமீபத்தில் இந்திய அரசாங்கம் கார்ட்டூனிஸ்ட் லட்சுமணுக்கு 'பத்மபூஷண்' விருது அளித்தது. இதனை அறிந்ததும் அவரது சகோதரர் நாவலாசிரியர் ஒரு வாழ்த்துச் செய்தி அனுப்பியிருந்தார். வாழ்த்துக்கு லட்சுமண் எழுதிய பதில் என்ன தெரியுமா?— "உங்கள் கடிதத்துக்கு நன்றி. லட்சுமணுக்குப் பரிசு இல்லை. நமது அரசியல் வாதிகளும், மந்திரிகளும் செய்துள்ள தவறுகள்தாம் எனக்கு இந்தப் பரிசை வாங்கிக் கொடுத்திருக்கின்றன."

ஹாலிவுட் கவர்ச்சி நடிகைகளில் ஒருவர் ஷெர்லி ஆனிஃபீல்ட்! மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் இவர் சினிமாவுக்கு முழுக்குப் போட்டுவிட்டு ஓடினார்! இப்போது இவர் மீண்டும் படங்களில் நடிக்க முன் வந்திருக்கிறார். ஓய்வு காலத்தில் அவருக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது! அதுபற்றி அந்த நடிகை என்ன சொல்கிறார் "எந்த சினிமாவையும்விட இது சிறந்த தயாரிப்பு!"

'சுதந்திரன்' பத்திரிகையில் இப்போது ஆசிரியராக இருப்பவர் கோவை மகேசன்! அறிஞர் அண்ணா தனது "திராவிட நாடு" பத்திரிகையில் 'தம்பிக்கு' என்ற தலைப்பில் கொள்கை விளக்கம் கூறும் மடல்களை எழுதி வந்ததுபோல, கோவை மகேசனும் 'சுதந்திரன்' பத்திரிகையில் கொள்கை விளக்கம் கூறும் அரசியல் மடல்களை எழுதி வருகிறார்! அறிஞர் அண்ணாவின் அதே பாணி! அதே நடை! இவரது மடல்களை பல இளைஞர்கள் ஆர்வத்தோடு விரும்பிப் படிக்கிறார்கள்! இவருக்கு ஒரு ஆலோசனை- சில சமயங்களில் மடல் மிகவும் நீண்டுவிடுகிறது. நீளத்தைக் கொஞ்சம் குறைப்பது நல்லது!

சுதந்திரம் அடைந்த பின்னரும் கூட இந்தப் பக்கத்தில் உள்ள நாடுகள் முன்னேற்றம் அடையாததற்குக் காரணம் பிரித்தானியர் நடைமுறைகளைப் பின்பற்றி வகுக்கப்பட்ட அரசியல் அமைப்புச் சட்டங்கள்தான் என்ற அபிப்பிராயம் இந்தியா, இலங்கை, பாகிஸ்தான் போன்ற நாடுகளில் வலுப்பெற்று வருகிறது. இந்த மூன்று நாடுகளிலுமே கடைசியாக நடந்து முடிந்த தேர்தல்களின் பின்னர் அரசியல் அமைப்பை மாற்றும் முயற்சிகள்தான் முக்கியத்துவம் பெற்று விளங்குகின்றன!

# சட்டைப்பை கனமில்லாத காமராஜர்!

சாமிஜி

காமராஜருடைய அரசியல் வளர்ச்சியில் முன்னாள் இந்தியப் பிரதமரான ஜவஹர்லால் நேருவுக்கும் பெரும்பங்கு உண்டு.

ஜவஹர்லால் நேரு 'ஜீனியஸ்'! அப்படிப்பட்டவர்களுக்கே உரிய மூர்க்கத்தனம் நிரம்பிய பிடிவாத குணமும், 'எனக்கே எல்லாம் தெரியும்' என்ற போக்கும் நேருவிடம் நிரம்ப இருந்தன.

தனக்குப் 'புத்திமதி' சொல்ல வருபவர்களை நேருவுக்கு அவ்வளவாகப் பிடிப்பது கிடையாது. இதன் காரணமாகத்தான் ராஜாஜி, மொரார்ஜி தேசாய் போன்ற தலைவர்களை இந்திய காங்கிரஸ் கட்சியிலிருந்தும், அரசாங்கத்தின் பொறுப்பான பதவிகளிலிருந்தும், ஒதுக்கி வைக்க நேருஜி முன்வந்தார்.

நேருவின் இந்த முயற்சிகளுக்குப் பக்க பலமாக நின்று உதவி செய்தவர் காமராஜர்.

இதனால் தான்,

தமிழ்நாட்டு மக்களுக்கு மட்டும் அறிமுகமானவராக இருந்த காமராஜர் அகில இந்தியத்தலைவராகவும் பிரகாசிக்க முடிந்தது.

நேருவிடம் சில குறைபாடுகள் இருந்த போதிலும் அவரது அந்தரங்க சுத்தியையும், அப்பழுக்கில்லாத தேசபக்தி



யையும், மனிதாபிமானத்தையும் யாரும் சந்தேகிக்க முடியாது.

அதே போலத்தான்,

காமராஜர் விஷயத்திலும் அவரது தொண்டு மனப்பான்


மையையும் தேசபக்தியையும் யாருமே சந்தேகிக்க முடியாது.

அரசியல் வாழ்க்கையை தங்களது தனிப்பட்ட வாழ்க்கை வசதிகளைப் பலப்படுத்துவதற்குப் பயன்படுத்தாத குறிப்பிடத்தக்க சில இந்திய அரசியல் தலைவர்களுள் ஒருவராக காமராஜரையும் சொல்லலாம்.

சட்டைப் பையில் கனமில்லாதவராக இருப்பதனுல் இன்றும் காமராஜருக்குப் புகழ் இருக்கிறது.

நேரு இருந்த காலத்தில்,

''புகழ்பெற்ற காங்கிரஸ் தலைவர்கள் அனைவரும் தங்களது பதவிகளைத் துறந்துவிட்டு கட்சிப் பணியாற்றவும், மக்களுக்குத் தொண்டு செய்யவும் முன்வரவேண்டும்'' என்ற தனது கருத்தை காங்கிரஸ் கட்சியிடம்



சமர்ப்பித்தவர் காமராஜர். இந்தத் திட்டத்தைச் சமர்ப்பித்ததோடு மட்டும் நில்லாமல், தான் வகித்து வந்த சென்னை மாநில முதலமைச்சர் பதவியையும் ராஜினுமாச் செய்து மற்றவர்களுக்கு முன்மாதிரியாக விளங்கியவர்.

நேருஜியினுல் வெகுவாகப் பாராட்டப்பட்ட இந்தத் திட்டம்தான் அந்த நாட்களில் ''காமராஜ் பிளான்'' என்ற பெயரில் பத்திரிகைகளில் பெரிதாக அடிபட்டது.

தனக்குப் பிடிக்காத பலரை, பதவியிலிருந்து அகற்றுவதற்கு நேருவுக்கு உதவி செய்ததும் இந்தத் திட்டம்தான்.

இந்தத் திட்டத்தைச் சமர்ப்பித்த பின்னர்தான் காமராஜர் ஒரு அகில இந்தியத் தலைவராகப் பரிணமிக்கத் தொடங்கினுர். அதற்கு முன்னர், இவருடைய செல்வாக்கு தமிழ்நாட்டில் மட்டுமே இருந்தது.

நேரு மறைந்த நேரத்தில் காங்கிரஸ் கட்சியின் தலைவராக இருந்தவர் காமராஜர்.

அந்த நேரத்தில்,

இந்தியாவை வழிநடத்தக் கூடிய ஒரு தலைவரைத் தெரிந்தெடுக்க வேண்டிய பொறுப்பில் பெரும் பகுதி காமராஜரின் தலையிலேயே விழுந்தது.

அப் பொறுப்பைச் செவ்வனே சமாளித்து, லால் பகதூர்

சாஸ்திரியை இந்தியப் பிரதம ராக்கினர் காமராஜர்.

பின்னர்,

லால் பகதூர் சாஸ்திரி மரணமடைந்தபோது, இந்தியப் பிரதமராக இந்திராவைத் தெரிவு செய்வதற்கு உதவி செய்தவரும் காமராஜர்தான்!

ஒரு முறையல்ல - இரு முறை இந்தியப் பிரதமர்களைத் தெரிவு செய்வதில் காமராஜர் வகித்த பெரும் பங்கினைக் கண்டதும், உலகத் தலைவர்கள் எல்லாரும் "யார் இந்தக் காமராஜர்?" என்று வினவக்கூடிய அளவுக்குப் புகழ்பெற்ற ஒரு ராஜதந்திரியாக விளங்கத் தொடங்கினர்.

ஆனல்,

இப்படிப்பட்ட காமராஜருக்கு இப்போது நடந்து முடிந்த இந்தியத் தேர்தலில் கிடைத்த ஆதரவைப் பார்க்கும் போது ஆச்சரியமாக இருக்கிறது.

தமிழ்நாட்டில் கருணநிதி வழிநடத்தும் தி. மு. க. விடம் படுதோல்வி அடைந்தது மட்டுமல்லாமல், அகில இந்தியக் களத்திலும் இந்திராகாந்தியிடம் படுதோல்வி அடைந்திருக்கிறது காமராஜர் வழிநடத்திய 'சின்டிகேட்' காங்கிரஸ்!

இதற்குக் காரணம் என்ன?

சோஷலியத்தில் அசையாத நம்பிக்கை வைத்திருந்தவரும், தனது தனிப்பட்ட அரசியல் வாழ்க்கையை பரிசுத்தம் மிக்கதாக வைத்திருந்தவருமான காமராஜர், பண முதலைகளான சுதந்திராவுடனும், பத்தாம் பசலிகளான ஜனசங்கத்துடனும் கூட்டுச் சேர்ந்ததுதான் இப்படுதோல்விக்கு காரணங்கள்!

சட்டைப் பையில் எள்ளளவும் கனமில்லாதவரான காமராஜர் எக்காரணம் பற்றியும் இக் கும்பலோடு கூட்டுச் சேர்ந்திருக்க வேண்டிய அவசியமே இல்லை!

காமராஜர் எவ்வளவு விரைவில் இந்த உண்மையை உணர்கின்ருரோ அவ்வளவுக்கு அவருக்கு நல்லது; இந்திய நாட்டுக்கும் நல்லது!

● ● ●

நீண்ட நாட்களாக மேற்கிந்திய கிரிக்கெட் கோஷ்டியின் காப்டனாக இருந்து வருபவர் சோபர்ஸ்! இவர் கிரிக்கெட் விளையாட்டின் சகல துறைகளிலும் வல்லவர். பல சாதனைகளை நிலைநாட்டியவர். டெஸ்மாட்' சின்போது ஒரு இன்னிங்ஸில் அதிகூடிய ஓட்டங்களை எடுத்த 'ரெக்கார்ட்' இன்றைக்கும் இவருடையதுதான்! ஆனல் இப்போது மேற்கிந்திய தீவுகளில் அஜிற் வடேகரின் தலைமையிலான இந்தியக் கோஷ்டியினர் சக்கைபோடு போட்டு வருவதால் சோபர்ஸை காப்டன் பதவியிலிருந்து நீக்கவேண்டும் என்று அங்குள்ள பத்திரிகை பத்திரிகையாளர்களும், கிரிக்கெட் விமரிசகர்களும் முணுமுணுக்கத் தொடங்கியிருக்கிருர்கள்.

ஜப்பானிய தலைநகரான 'டோக்கியோ'வில் ஏராளமான 'நைட் கிளப்'புகள் இருக்கின்றன. பலவேறு வகைப்பட்ட மனிதர்களைக் கவரும் வகையில் பல்வேறு வகையான பெண்கள் இந்த 'நைட் கிளப்'புகளில் தொழில் செய்து வருகிறார்கள். தங்கள் குடும்பத்தைப் பற்றிய மனச்சாட்சி உறுத்தும் மனிதர்களைக் கவர்வதற்காக சில 'நைட் கிளப்'புகளில் முழுக்க முழுக்க குடும்பப் பெண்களைப் போலவே நடைமுறைகளையுடைய பெண்கள் இருக்கிறார்கள், இன்னுஞ் சில இடங்களில் 'நர்சு'களைப் போல உடையணிந்த பெண்கள் இருக்கிறார்கள். சில இடங்களில் கடற்படையினரைக் கவர்வதற்காக அவர்களின் பழக்க வழக்கங்களில் கைதேர்ந்த பெண்கள் இருக்கிறார்கள். வேறு சில இடங்களில் இலக்கிய தாகம் கொண்டவர்களைத் திருப்தி செய்வதற்காக இலக்கியத்தில் நன்கு பரிச்சயமான பெண்கள் இருக்கிறார்கள் இப் பெண்களிடம் பழைய இலக்கியங்களிலிருந்து இன்றைய புதிய இலக்கியங்கள் வரைக்கும் வாடிக்கைக்காரருக்கு ஏற்ற விதத்தில் அவரின் சுவையை அறிந்து சம்பாஷிக்கும் திறமை இருக்கிறது.

சில குழந்தைகள் சில நேரங்களில் சாப்பிட விரும்பாது இருப்பது இயற்கை. தாய்மார்கள் இதையிட்டுக் கவலைப் படத்தேவையில்லை. உணவு உண்பதும், நித்திரைக்குச் செல்வதும் குழந்தைகள் விரும்பிச் செய்யும் செயல்களாக, தாங்களாகவே செய்யும் செயல்களாக இருக்க வேண்டும்! அதுதான் குழந்தையின் உடல் வளர்ச்சி, உள வளர்ச்சி இரண்டுக்கும் துணை செய்வதாக இருக்கும்!

● ● ●




● 'கல்கண்டு' பத்திரிகையின் ஆசிரியராக இருக்கும் 'தமிழ்வாணன்' முன்னர் 'அணில்' என்ற சிறுவர் பத்திரிகை ஒன்றுக்கு ஆசிரியராக இருந்துவந்தார். அதில் இவருக்கு படுதோல்விதான் கிடைத்தது. தோல்வியால் துவண்டு போய் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த தமிழ்வாணனுக்கு உற்சாகம் ஊட்டி உதவி செய்தவர் 'குமுதம்' பத்திரிகையின் முதலாளியும் ஆசிரியருமான எஸ். ஏ. பி. அண்ணாமலைதான்! தமிழ்வாணன் தனது வாழ்நாளில் எஸ் ஏ. பியை மறக்கவே முடியாது!

# குலத்தொழில் செய்கிறார்கள்!

உலகம் முழுவதிலுமுள்ள பெரும்பாலான இளைஞர்கள் மத்தியில் குலத்தொழிலைச் செய்வது ஒரு வெட்கந்தரும் நிகழ்ச்சியாகவும், பழமையைப் போற்றுவது விருப்பத்தகாத ஒன்றாகவுமே இருக்கிறது. ஆனால் இதற்கு நேர்மாறாக இருக்கிறார்கள் ஜப்பான் நாட்டின் தென்பகுதியிலுள்ள ஃபியூஜிகேஸ் என்ற கிராமத்தில் வாழும் இளைஞர்கள் இவர்களுடைய சராசரி வருட வருமானம் 2500 டாலருக்கும் மேற்பட்டதாக இருக்கிறது. மற்றைய கிராமங்களில் வாழும் மக்களுடையதைக் காட்டிலும் இவர்களுடைய வாழ்க்கைத்தரம் உயர்ந்ததாகவே இருக்கிறது. கலர் டெலிவிஷன் செட்டுக்களும், புத்தம் புதிய கார்களுமாக இவர்கள் உல்லாசமாக வாழ்க்கை நடாத்துகிறார்கள். இவர்கள் தங்கள் தொழிலைச் செய்வதற்காக ஜப்பான் நாடு முழுவதுமே நீண்ட தூரம் பிரயாணம் செய்கிறார்கள். சில சமயங்களில் பெரிய பெரிய நகரங்ளில் ஜாகை வைத்து நீண்ட நாட்களுக்குத் தங்கியும் விடுகிறார்கள்! ஆனால், இவர்களுடைய முயற்சிகளுக்குத் தடையாக இருக்கிறார்கள் ஜப்பானிய பொலீஸார்! இந்தக் கிராமத்தவர்களின் குலத்தொழில் என்ன தெரியுமா? — திருடுவதும், கொள்ளையடிப்பதும்தான்! 1880ம் ஆண்டிற்கு முற்பட்ட காலத்திலிருந்தே இக்கிராமத்தவர்கள் இத்தொழிலையே செய்து வருவதாகச் சொல்கிறார்கள்! திருடுவதை ஒரு கலையாகவே பயின்று தொழிற்பட்டு வருகிறார்கள் இக்கிராமத்தவர்! இவர்களுக்கு இதில் எதுவித வெட்கமும் இருப்பதாகத் தெரியவில்லை!

● எழுபத்திமூன்று தினசரிப் பத்திரிகைகள் உட்பட 600க்கு மேற்பட்ட அந்நிய மொழிப் பிரசுரங்கள் அமெரிக்காவில் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகின்றன. இப்பிரசுரங்கள் ஏறக்குறைய 40 மொழிகளில் வெளிவருகின்றன அரபு, அர்மீனியன், ஸ்பானிஸ், கிறீஸ், ஜெர்மன், ரஷ்ய, சீன, ஜப்பானிய மொழிகள் சிலவாகும்.

'செக்ஸ்' உணர்வைத் தூண்டுவதற்கு மது வகைகள் துணை செய்வதாக ஒரு அபிப்பிராயம் நிலவி வருகிறது. இதில் எள்ளத்தனையும் உண்மை கிடையாது என்பதை மருத்துவ நிபுணர்கள் நிரூபித்திருக்கிறார்கள். போதைப் பொருட்கள் நாளாவட்டத்தில் 'செக்ஸ்' உணர்வையே முற்றாக மழுங்கடித்து விடுகின்றன என்பது தான் உண்மையாகும்.

# பரிசு....... உங்களுக்கு!

உங்கள் வாழ்க்கையில், அல்லது உங்களுக்குத் தெரிந்தவர்களுடைய வாழ்க்கையில் ஏதாவது மிகச் சுவையான சம்பவங்கள் நடந்திருக்குமல்லவா? அவற்றை மிகச் சுருக்கமாக (அஞ்சலட்டையில் கூட எழுதலாம்!) எழுதி எமக்கு அனுப்பி வையுங்கள். ஆனால் பின்வரும் மூன்று விஷயங்களைக் கவனியுங்கள்.

ஒன்று: உங்கள் கற்பனைத் திறனால் சிருட்டிக்கப்பட்ட விஷயங்களை எழுதக்கூடாது. உண்மையில் நடந்த சம்பவங்களையே எழுத வேண்டும்.

இரண்டு: குறித்த விஷயம் இதற்குமுன் எந்தப் பத்திரிகையிலோ புத்தகத்திலோ வெளிவராததாக இருக்க வேண்டும்.

மூன்று: குறித்த விஷயத்தை எமக்கு அனுப்பும்போது, கீழே அச்சிடப்பெற்றுள்ள எமது முகவரியை வெட்டி, அஞ்சலட்டையாயினும் சரி, கடிதமாயினும் சரி அதன் மீது ஒட்டி அனுப்பவேண்டும்.

இந்த மூன்று குறிப்புகளையும் சரிவரக்கவனித்து விஷயங்களை அனுப்பிவையுங்கள். வெள்ளியில் பிரசுரரிக்கப்படும் விஷயங்கள் ஒவ்வொன்றுக்கும் ரூபா ஐந்து பரிசாக வழங்கப்படும்.

இவற்றைவிட 'வெள்ளி'க்கு ஏற்றதான சுவையான சிறு செய்திகள் அனுப்பிவைத்தால் அவற்றிற்கும் தகுதிக்குத் தக்க ரொக்கப் பரிசு வழங்கப்படும்.

பிரசுரத்துக்காக அனுப்பப்படும் எந்த விஷயத்தையும் அனுப்பும்போது கீழேயுள்ள முகவரியையே வெட்டி ஒட்ட வேண்டும்.

---

"வெள்ளி"

226, காங்கேசன்துறை வீதி,

யாழ்ப்பாணம்.

---


ஆங்கிலம் பயிலும் மாணவருக்கு மிகச் சிறந்த உதவி நூல்:

வரதரின்

**மாணவர் அகராதி**

[ஆங்கில - ஆங்கில - தமிழ்]

**VARATHAR**

**STUDENT'S DICTIONARY**

(English-English-Tamil)

விலை ரூ. 5/-

**வரதர் வெளியீடு**

226, காங்கேசன்துறை வீதி,

யாழ்ப்பாணம்.

# ஈழத்துக் 'கல்கண்டு' கண்டு......

✱ ஈழத்துக் ''கல்கண்டு'' கண்டு மகிழ்ந்தேன். அமைப்பும், விஷயங்களும் பிரமாதம்!

கொழும்பு-5 — மங்களா சுந்தரேசன்.

✱ ''கல்கண்டு'' போன்றே வெளிப் பார்வைக்குத் தோற்றிய போதிலும், 'வெள்ளி'க்கு ஒரு தனி நோக்கு இருப்பதை சஞ்சிகையை வாசித்து முடிந்ததும் உணர்ந்தேன்.

திருகோணமலை. — ஆர். ராமலிங்கம்.

✱ கொழும்புப் பகுதியில் முதல் இதழ் முழுவதும் விற்பனை யாகிவிட்டது அடுத்த தடவை முன்னர் அனுப்பியதைக் காட்டிலும் மேலதிகமாக நானூறு பிரதிகள் அனுப்பி வைக்கவும்.

கொழும்பு-14. — எஸ். சுரேஸ்குமார்.

✱ இளைஞர்களைக் கவர்வதற்கு நீங்கள் சுலபமான வழியைக் கண்டுபிடித்துவிட்டீர்கள். முதல் இதழ் மாதிரியே எல்லா இதழ்களும் இருக்குமானால் உங்கள் முயற்சி வெல்வது உறுதி

யாழ்ப்பாணம். — அ கனகசபை.

✱ ஈழத்திலிருந்து வெளிவரும் பத்திரிகைகளிலிருந்து வேறு பட்ட முறையில், தென்னிந்தியப் பத்திரிகையோ என ஐயுறத்தக்க அளவில் பத்திரிகை அமைந்திருக்கிறது.

திருநெல்வேலி. — கே. வி.

✱ 'வெள்ளி' முதலாவது இதழே மிகச் சிறப்பாக அமைந்திருக் கிறது. எனது மனப்பூர்வமான பாராட்டுக்கள் இரண்டு கட்டுரைகளுமே மிகப் பிரமாதம். அடுத்த இதழிலிருந்து எனது முகவரிக்கு 5 பிரதி அனுப்புங்கள். இங்குள்ள எனது நண்பர்களுக்கும் வழங்க விரும்புகிறேன்.

கண்டி. — ஏ. ரி. பொன்னுத்துரை.

✱ 'கல்கண்டு' நல்ல பத்திரிகை, ஆனால் ''அதில் எங்கள் நாட் டுச் செய்திகள் அதிகம் இல்லையே'' என்று நினைத்துக் கொண்டிருந்தேன். ஈழத்து மண்வாசனையோடு வந்து கொண்டிருக்கும் ''வெள்ளி'' அந்தக் குறையைப் போக்கி விட்டது.

பேராதனை-, — எச். ஏ. முகம்மது.

✱ கட்டுரைகளில் 'சாரம்' இருக்கிறது; புதிய பார்வையும் இருக்கிறது. கொஞ்சம் 'காரத்'தையும் சேர்த்துக்கொண் டால் என்ன?

கொழும்பு. — ''பரணன்''

[ இன்னும் பலர் கடிதமூலம் தங்கள் பாராட்டுகளைத் தெரிவித்து இருக்கிறார்கள். அது தவிர, பல நண்பர்களும், வாசகர்களும் அலுவலகத்துக்கு நேரிலேயே வருகை தந்து பாராட்டுகளைத் தெரிவித்திருக்கிறார்கள். அனைவருக்கும் எனது நன்றி. ஆர்.]

# எல்லோரும் போற்றுகிறுர்கள்!

# வரதரின் பலகுறிப்பு — 1971

வரதர் வெளியீடு, 226, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

**விலை ரூபா 10/-** (பார்சல் செலவு ரூ. 1/-)

"ஆங்கில மொழியிலும் ஏனைய மேலைநாட்டு மொழிகளிலும் 'டைரக்ரறி' எனப்படும் வழிகாட்டி நூல்கள் ஏராளமாக காணப்படுகின்றன. ஆனுல் தமிழ் மொழியைப் பொறுத்த மட்டில் அத்தகைய நூல்களைக் காண்பது அரிதாகும்.......... .....

இலங்கைவாழ் தமிழ்பேசும் மக்கள் தமது தாய் நாட்டைப் பற்றியும் அதன் ஒவ்வோர் துறையைப்பற்றியும் தமிழ் மொழியில் அறியவியலாதவர்களாயிருந்ததை உணர்ந்த பிரபல எழுத்தாளர் வரதர் 1954-ல் முதலாவது டைரக்ரறியை 'வரதரின் பலகுறிப்பு' என்னும் மகுடத்துடன் வெளியிட்டார். அந்நூல் கல்விமான்களிடமிருந்தும், பொதுமக்களிடமிருந்தும் மகத்தான வரவேற்பைப் பெறறது. இந்த வருடம் 'வரதரின் பலகுறிப்பு' என்னும் நாலாவது வழிகாட்டி நூல் முற்றிலும் புதுமை பொலிய வெளிவந்துள்ளது.

இலங்கையைப் பற்றிப் பூரணமாக அறிய விரும்புவோர்க்கு இந்நூல் ஓர் அமுதசுரபி. இலங்கையின் புவியியல், வரலாறு, அரசியல், கல்வி, பொருளாதாரம், கலாச்சாரம், போக்குவரத்து ஆகியன பற்றிய இன்றியமையாக் குறப்புக்களாலும் பல்வேறு துறைகள் பற்றிய விபரங்கள், முகவரிகள் ஆகியனவற்ருலும் இந்நூல் சிறப்புறுகின்றது. ...... ........ ..................

பெரிய அளவில் அழகிய முறையில் அச்சிடப்பட்டுள்ள இந்நூலை வெளியிட்ட வரதரின் துணிச்சலையும் தமிழ்ப்பற்றையும் யாரும் பாராட்டாமல் இருக்க முடியாது. — 'ஈழநாடு'

"........ வெளிநாட்டுத் தோழர்களுக்கு இந்நூப் பலகுறிப்பை அன்பளிப்பாகக் கூசாமல் அனுப்பலாம். இது ஆசிரியர்களிடம் இருக்கவேண்டிய ஒன்று... ... ...எழுத்தாளர்கள் ஒவ்வொருவரும் இதை வாங்கிப் பேணிக் காக்கவேண்டும்............"

'மல்லிகை'யில் இரசிகமணி கனக. செந்திநாதன்.


அச்சிட்டு வெளியிட்டவரும், ஆசிரியரும்: தி. ச. வரதராசன்
அச்சு: ஆனந்தா அச்சகம், 226, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம்.